## சுருக்கம்

மாற்றுத் திறனாளிகள் நலன் – தசைச் சிதைவு நோயால் பாதிக்கப்பட்டவர்களுக்கு பராமரிப்பு உதவித் தொகை வழங்கும் திட்டம் 2010–11ஆம் ஆண்டிற்கு தொடராணை மற்றும் ரூ. 63.10 இலட்சம் நிதி ஒப்பளிப்பு வழங்கி ஆணை வெளியிடப்படுகிறது.

---

மாற்றுத் திறனாளிகள் நலத் (மா.திந.2) துறை

அரசாணை(நிலை) எண்.32 நாள்: 01–07–2010

ஆனி 17, திருவள்ளுவர் ஆண்டு 2041

படிக்க:

1. அரசாணை(நிலை) எண். 138, சமூக நலம் மற்றும் சத்துணவுத் திட்டத்(சந4) துறை, நாள் 5.10.2009.
2. மாற்றுத் திறனாளிகளுக்கான மாநில ஆணையரின் கடித ந.க. எண். 5379/மா.திந 2(2)/2010, நாள் 2.6.2010.

------

**ஆணை:**

மேலே ஒன்றில் படிக்கப்பட்ட அரசாணையில் தசைச் சிதைவு நோயால் பாதிக்கப்பட்டவர்களுக்கு மனவளர்ச்சி குன்றியோர் / கடும் உடல் பாதிப்படைந்த மாற்றுத் திறனாளிகளுக்கு அளிக்கப்படுவது போன்று மாதாந்திர பராமரிப்பு உதவித் தொகையாக ஒரு நபருக்கு ரூ. 500/– வீதம் 1000 நபர்களுக்கு வழங்கவும் 2009–2010 ஆம் ஆண்டில் இத்திட்டத்தை தொடர ரூ. 63.10 இலட்சம் நிதி ஒப்பளிப்பு செய்து அரசு ஆணை வெளியிடப்பட்டுள்ளது.

2. மரபணுக்கள் பாதிப்பால் தசையை உருக்கும் உயிர்க்கொல்லி நோயான தசைச் சிதைவு நோயால் பாதிக்கப்பட்டவர்களுக்கு பராமரிப்பு உதவித் தொகையாக மாதந்தோறும் ரூ.500/– பணவிடை அஞ்சல் மூலம் அனுப்பி வைக்கும் திட்டத்தினை 2010–2011ம் நிதியாண்டு தொடர வேண்டியது அவசியமாகிறது என்றும், எனவே தசைச் சிதைவு நோயால் பாதிக்கப்பட்ட 1000 நபர்களுக்கு பராமரிப்பு உதவித் தொகை வழங்க கீழ்க்கண்டவாறு நிதி ஒதுக்கீடு தேவைப்படுகிறது என்றும் மாற்றுத் திறனாளிகளுக்கான மாநில ஆணையர் தெரிவித்துள்ளார்.

| | |
|---|---|
| பராமரிப்பு உதவித் தொகை ரூ.500 X 12 மாதங்கள் X 1000 நபர்கள் | ரூ. 60,00,000/– |
| பணவிடை அஞ்சல் அனுப்ப ரூ.25.25 X 12 மாதங்கள் X 1000 நபர்கள் | ரூ. 3,03,000/– |
| மொத்தம் | ரூ.63,03,000/– |

3. தசைச் சிதைவு நோயால் பாதிக்கப்பட்ட கூடுதல் நபர்களுக்கு பராமரிப்பு உதவித் தொகை கோரி ஒரு சில மாவட்டங்களிலிருந்து கருத்துரு பெறப்பட்டுள்ளது என்றும், அனைத்து மாவட்டங்களிலும் கருத்துரு பெற்று 1.10.2010க்குள் தசைச் சிதைவு நோயால் பாதிக்கப்பட்ட கூடுதலான நபர்களுக்கு பராமரிப்பு உதவித் தொகை வழங்க கூடுதல் நிதி ஒதுக்கீடு கோரி அரசிற்கு தனியே கருத்துரு அனுப்பப்படும் என்றும் தெரிவித்து தசைச் சிதைவு நோயால் பாதிக்கப்பட்டவர்களுக்கு பராமரிப்பு உதவித் தொகை வழங்கும் திட்டத்தினை 2010–2011ம் ஆண்டு தொடர்ந்து செயல்படுத்த ஆணையும், 1000 நபர்களுக்கு வழங்குவதற்காக ரூ.63,10,000/– நிதி ஒதுக்கீடு வழங்குமாறும் மாற்றுத் திறனாளிகளுக்கான மாநில ஆணையர் கேட்டுக் கொண்டுள்ளார்.

4. மாற்றுத்திறனாளிகளுக்கான மாநில ஆணையரின் கருத்துருவினை ஏற்று, தசைச் சிதைவு நோயால் பாதிக்கப்பட்டவர்களுக்கு மாதாந்திர பராமரிப்பு உதவித் தொகையாக ஒரு நபருக்கு ரூ.500/– வீதம் 1000 நபர்களுக்கு வழங்கும் திட்டத்தை 2010–11ம் ஆண்டு தொடர்ந்து செயல்படுத்த அனுமதியும் பராமரிப்பு உதவித் தொகைக்காக ரூ. 60.00 இலட்சமும், பணவிடை அஞ்சல் அனுப்ப ரூ3.10 இலட்சமும் என மொத்தம் ரூ. 63.10 இலட்சம் (ரூபாய் அறுபத்து மூன்று இலட்சத்து பத்தாயிரம் மட்டும்) 2010–2011 ஆம் ஆண்டில் செலவினம் மேற்கொள்ள மாற்றுத் திறனாளிகளுக்கான மாநில ஆணையருக்கு அனுமதியும் நிதி ஒப்பளிப்பும் அளித்து அரசு ஆணையிடுகிறது.

5. மேலே பத்தி 4ல் ஒப்பளிக்கப்பட்ட செலவினம் கீழ்க்காணும் கணக்குத் தலைப்பின் கீழ் பற்று வைக்கப்பட வேண்டும்.

| | |
|---|---|
| 2235 சமூகப் பாதுகாப்பும் நலனும் –02. சமூக நலன் – 101 மாற்றுத் திறனாளிகள் நலன் – பதினொன்றாம் ஐந்தாண்டு திட்டப் பணிகள் II மாநில திட்டம்MI– தசைக் கோளாறு நோயால் பாதிக்கப்பட்ட நபர்களுக்குப் பராமரிப்பு மானியங்கள் –09– உதவித் தொகை –03 குறிப்பிட்டத் திட்டங்களுக்கான உதவித் தொகை.<br>(து.தொ.கு. 2235–02–101–MI.0938) | ரூ. 60.00 இலட்சம் |
| 05– அலுவலகச் செலவுகள் –04 அலுவலகப் பணி அஞ்சல் வில்லைகள் மற்றும் தபால் செலவு.<br>(து.தொ.கு.2235–02–101–MI.0545) | ரூ. 3.10 இலட்சம் |
| மொத்தம் | ரூ. 63.10 இலட்சம் |

6. மேலே பத்தி–4ல் ஒப்பளிக்கப்பட்ட செலவினம் அரசாணை(நிலை) எண். 107, நிதி (வ.செ. பொது–I)துறை, நாள் 31.03.2010ல் கூறப்பட்டுள்ளபடி காலாண்டு கட்டுப்பாட்டு நிதியொதுக்கத்திற்குட்பட்டு மேற்கொள்ளப்பட வேண்டும் என மாற்றுத் திறனாளிகளுக்கான மாநில ஆணையர் கேட்டுக் கொள்ளப்படுகிறார்.

7. இவ்வாணை நிதித்துறையின் ஒத்திசைவுடன் வெளியிடப்படுகிறது. நிதித்துறை அ.சா.எண்.நிதி(சமூகநலம்)/33801/10, நாள் 29.6.2010.

( ஆளுநரின் ஆணைப்படி)

சோ. சு. ஜவஹர்,
அரசுச் செயலாளர்.

பெறுநர்
மாற்றுத் திறனாளிகளுக்கான மாநில ஆணையர், சென்னை–6.
அனைத்து மாவட்ட ஆட்சித் தலைவர்கள் (மாற்றுத் திறனாளிகளுக்கான மாநில ஆணையர் வழியாக)
அனைத்து மாவட்ட மாற்றுத் திறனாளிகள் நல அலுவலர்கள் (மாற்றுத் திறனாளிகளுக்கான மாநில ஆணையர் வழியாக)
சம்பளக் கணக்கு அலுவலர், சென்னை–5/9/35.
தலைமைக் கணக்காயர், சென்னை–18/35
தலைமக் கணக்காயர், சென்னை– 18/35 (பெயரில்)

<u>நகல்:-</u>
நிதி (சந) துறை, சென்னை–9.
முதலமைச்சர் அலுவலகம், சென்னை–9.
செயலாளர் (மா.திந. துறை) அவர்களின் தனிச் செயலாளர், சென்னை–9.
மாற்றுத் திறனாளிகள் நலத் துறை, அனைத்துப் பிரிவுகள்.
இருப்பு கோப்பு/உதிரி

// ஆணைப்படி அனுப்பப்படுகிறது//

பிரிவு அலுவலர்.